# 80. THIRUVALLAVAZH



| | |
|---|---|
| PLACE | THIRUVALLAVAZH |
| PRESENT NAME | THIRUVALLA |
| BASE TOWN | THIRUVALLA |
| DISTANCE | 3 KM |
| MOOLAVAR | KOLAPPIRAN |
| THIRUKKOLAM | NINDRA |
| THIRUMUGAMANDALAM | EAST |
| UTHSAVAR | |
| THAYAR | SELVATHIRUKKOZHUNDHU NATCHIYAR |
| MANGALASASANAM | 22 PAASURAMS |
| PRATYAKSHAM | SAPTHA RISHIS |
| THEERTHAM | KANDAAKARNA THEERTHAM |
| VIMANAM | SADHURANGAKOLA VIMANAM |
| NAMAVALI | Sri Vathsalyavalli nayiga sameda Sri Sundaraya parabramane namaha |



கேரளாவிலுள்ள சங்கரமங்கலம் கிராமத்தில் சங்கரமங்கலத்தம்மையார் என்ற பதிவிரதை வாழ்ந்தார். இவர் ஏகாதசி தினத்தில் விரதம் இருந்து இந்த கோயிலுக்கு வருவார். மறுநாள் துவதாசியன்று இந்தக் கோயிலில் வசிக்கும் துறவிகளுக்கு அன்னதானம் செய்வார். இவர் வரும் வழியிலுள்ள காட்டில் வசித்த தோலாகாசுரன் என்பவன், இந்த அம்மையாரை கோயிலுக்கு செல்ல விடாமல், மறைவாக இருந்து, அவரே அறியாமல் துன்பம் விளைவித்தான். இதை பெருமாளிடம் அம்மையார் முறையிட்டார். ஒருமுறை அவர் காட்டு வழியே வரும்போது, பிரம்மச்சாரி இளைஞன் ஒருவன், ஏதோ ஒரு அசுர சக்தியுடன் போர் புரிவதைக் கண்டார். சற்று நேரத்தில் சப்தம் அடங்கி விட்டது. பிரம்மச்சாரியைக் காணவில்லை. அம்மையார் கோயிலுக்கு வந்தார். அங்கே, பெருமாள் காட்டில் பார்த்த பிரம்மச்சாரி இளைஞனைப் போன்ற தோற்றத்தில் இருந்தார். தன்னைப் பாதுகாக்க, பெருமாளே நேரில் வந்து

# 80. THIRUVALLAVAZH

அசுரனுடன் போரிட்டதை அம்மையார் புரிந்து கொண்டார். பிரம்மச்சாரி இளைஞர்கள் அங்கவஸ்திரம் அணிவதில்லை. பெருமாளும் இத்தலத்தில், அங்கவஸ்திரம் இல்லாமல் மார்பு தெரிய காட்சியளிக்கிறார். அவரது மார்பில் லட்சுமி (திரு) நிரந்தரமாக குடியிருப்பதால், இவருக்கு "திருவாழ்மார்பன்' என்ற பெயர் ஏற்பட்டது. மற்ற தலங்களில் பெருமாளின் திருவடி தரிசனம் முக்கியம். இங்கோ, மார்பு தரிசனம் சிறப்பானதாகக் கருதப்படுகிறது.

பொதுவாக, கருடாழ்வார் பெருமாளுக்கு எதிரில் அருள்பாலிப்பார். ஆனால், இங்கு 50 அடி உயரத்திலுள்ள கல் தூணின் மீது பறக்கும் நிலையில் அருள்பாலிக்கிறார். கருடனுக்கு தங்ககவசம் சாத்தப்பட்டுள்ளது. பெருமாளை வணங்குவோர் தங்களது நியாயமான வேண்டுகோளை அவரிடம் வேண்டியவுடனேயே, கருடன் அவரை ஏற்றிச்செல்ல தயார் நிலையில் இருப்பதாக ஐதீகம்.

இத்தல பெருமாள் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் அருள்பாலிக்கிறார். மூலவரின் விமானம் சதுரங்க கோல விமானம் எனப்படுகிறது. இந்த பெருமாளை கண்டாகர்ணன், சங்கரமங்கலத்தம்மையார் ஆகியோர் தரிசனம் செய்துள்ளனர்.

பெருமாள் இங்கு பிரம்மச்சரிய விரதம் அனுஷ்டிக்கிறார். எனவே, ஐயப்பன் கோயிலைப் போல, இங்கும் பெண்களுக்கு அனுமதியில்லை. மார்கழி திருவாதிரை நட்சத்திரத்தன்றும், சித்திரை விஷு அன்றும் இவரது மார்பு தரிசனம் விசேஷம் என்பதால், இந்த நாட்களில் மட்டும் பெண்களை அனுமதிப்பார்கள். உப்பு மாங்காய் நைவேத்யம்: சங்கரமங்கலத்தம்மையார் பிரம்மச்சாரிகளுக்கு தானம் செய்த போது, பெருமாளும் பிரம்மச்சாரி வடிவில் வரிசையில் நின்றார். தனக்களித்த உணவை ஏற்ற அவர், இப்பெண் விரதம் முடித்து தான் சாப்பிடுவதற்காக வைத்திருந்த உப்பு மாங்காயை கேட்டாராம். அவள் அதை பாக்கு மரத்தின் இலையில் வைத்து பெருமாளுக்கு அளித்தார். அன்றிலிருந்து தினமும் இத்தலத்தில் கமுகு இலையில் சாதமும் உப்புமாங்காயும் நைவேத்யமாக வைக்கப்படுகிறது. இத்தலத்தில் கேரளாவுக்கே உரித்தான சந்தனத்துடன் விபூதியும் தரப்படுவது விசேஷம். மார்கழி திருவாதிரையன்று சிவன் இவரது கோலத்தைக் காண வந்தாராம். அதனால், விபூதியும் கொடுப்பது வழக்கமாயிற்று.

குழந்தை பாக்கியம் வேண்டுபவர்கள் கேரளாவின் பிரசித்தி பெற்ற கதகளி நிகழ்ச்சியை கோயிலில், நேர்ச்சையாக நடத்துகிறார்கள். நாட்டியக் கலைஞர்கள் கோயிலிலேயே உள்ளனர். தினமும் இந்த நேர்ச்சை நடத்தப்படுகிறது. இந்த நடனக்குழுவிற்கு "கலாக்ஷேத்ரா' என்று பெயர்.

**Sthlapuranam :**

This sthalam explains about the relationship and the unity of Saivam and Vaishnavam. This sthalam also tells about the good character.

Kanda Karan, who is the chief leader of Siva Perumaan's Siva Ganangal (troop (or) Crew) and had a vulgour actions towards everything. He had a ugly structure and that fears all person who sees him. He gave Narabali (Killing peoples) for Siva Perumaan. But, on seeing this, Siva perumaan ordered him not to give Narabali and asked him to worship the Emperumaan, Sriman Narayanan who is said to be the "Santha Sorubhee". He also said by worshipping him, he can get the Mukthi and can attain Paramapadham. On hearing this, Kanda Karnan, who was a great Veera saivan, changed to Vaishnavan and started to tell the Ashtakshara Mantram, "Om Namo Narayanaya". At the same time he left worshipped Siva Perumaan and tied two small bells on his ears to avoid hearing Siva Peruman's name (or) his mantram "Om Nama Shivaya".

# 80. THIRUVALLAVAZH

Inspite of not wanting to hear the mantram of Sivaperumaan, he was really thinking about him and at the same time he was having the bhakti towards Sriman Narayanan by expressing the Ashtakshara mantram. "Om Namo Narayana". By devoting both the Gods, Lord Shivan and Sriman Narayanan, he forgeot all of his previous actions and started completly to make Dhyanam towards the perumals. By doing so, he got his mukthi and attained paramapadham. Thus by getting the mukthi through Kanda Karnan, the perumal explains about the ralation and unity of both the Saivam and Vaishnavam gods and explains that there should be no racism among the religion. To explains more about this, in this sthalam the thiru Neeru (Vibhoodi) is given as the "Prasadham" to the bhaktas. But, generally Vibhoodhi is given in Saivam temples only. This is one of the special explaination about the unity and explains that both the Gods should be treated as one.




In this sthalam, there lived a good charactered women, by named "Sankaramangala thenmai". She had a great bhakti towards Sriman Narayanan and used to do fasting in Ekadesi and after finishing the Viradham (fasting), she used to give food for any Brahmachari. Likewise, in one Ekadesi day, she waited for a Brahmachari to give food. But at that time, a demon by named "Tholakaasuran" lived and she stood as an obstacle for her viradham and did not allow any persons to get the food from Sankara mangala Thenmai. She was worried about this and prayed to this sthala perumal, Kolapiraan. At that time, accepting the request and pray of her, the perumal came towards her like a Brahmachari to get the food. On seeing him,

# 80. THIRUVALLAVAZH

Tholakaasuran tried to stop him and fought with him. During the fight, Tholakaasuran was killed by the perumal who came there in the form of a Brahmachari.

After, Tholakaasuran was killed, the perumal in Brahmachari form went inside SankaraMangala Thanmai's house and started to eat the food offered by her. At that time, thorugh her Gnana eyes, she found but the perumal has come in the form of Brahmachari and asked him to move the cloth which screened his chest. After the cloth is removed, she could see Periya piratti inhis Thiru Maarbhu. Since, the perumal is so called as "Thiruvaazh Maarbhan". Since, he came as Brahmachari and showed the piratti, he is also called as "Sri Vallabhan".

Since, the perumal gave his presence to explain the good character of a women, the selva Nayagi, periya piratti is named as "Selva thirukozhunthu Naachiyaar". Since, the perumal came as a brahmachari, the piratti is also called as "Vaathsalya Devi".

Behind the Moolavar, Sudharsana Chakkram, who is said to be so powerful is found. So, it is great to get the seva of the perumal in front along with Lakshmi piratti in his chest and behind the perumal, we can worship, the Sudharsana Chakkaram.

Another special news about this sthalam is, there is one separate sannadhi for Thiruppaan Alwar, where no ladies are allowed, only gents are allowed into the sannadhi.

**Moolavar:**

The Moolavar found in this sthalam is Kolapiraan. He is also called as "Thiruvaazhmarban". Moolavar is found in Nindra Thirukkolam facing his thirumugham along Eastern direction. The Perumal is prathyaksham for Kanda Karnan.



# 80. THIRUVALLAVAZH

**Thayaar:**

The Thaayar of this sthalam is Selva Thirukkozhudhu Naachiyaar. Also named as Vaathsalya Devi.

**Mangalasasanam:**

Nammalwar - 11 Paasurams.
Thirumangai Azhwar – 11 Paasurams

**Total 22 Paasurams**

**Pushkarani:**

Kanda Kara Theertham.

Pambha Nadhi.

**Vimanam:**
Saduranga Kola Vimaanam.

| **திவ்யதேசம் 080**<br>**திருவல்லவாழ்** (திருவல்லா – ஸ்ரீவல்லப க்ஷேத்ரம்) | |
|---|---|
| திருமங்கையாழ்வார் | 1808–1817,2674(118) |
| நம்மாழ்வார் | 3205–3215 |
| மொத்த பாசுரங்கள் | 22 |

**திருமங்கையாழ்வார்**

**திருவல்லவாழ்**

1808 தந்தை தாய் மக்களே சுற்றம் என்று உற்றவர் பற்றி நின்ற
பந்தம் ஆர் வாழ்க்கையை நொந்து நீ பழி எனக் கருதினாயேல்
அந்தம் ஆய் ஆதி ஆய் ஆதிக்கும் ஆதி ஆய் ஆயன் ஆய
மைந்தனார் வல்லவாழ் சொல்லுமா வல்லை ஆய் மருவு நெஞ்சே 1

1809 மின்னும் மா வல்லியும் வஞ்சியும் வென்ற நுண் இடை நுடங்கும்
அன்ன மென் நடையினார் கலவியை அருவருத்து அஞ்சினாயேல்
துன்னு மா மணி முடிப் பஞ்சவர்க்கு ஆகி முன் தூது சென்ற
மன்னனார் வல்லவாழ் சொல்லுமா வல்லை ஆய் மருவு நெஞ்சே 2

1810 பூண் உலாம் மென் முலைப் பாவைமார் பொய்யினை மெய் இது என்று
பேணுவார் பேசும் அப் பேச்சை நீ பிழை எனக் கருதினாயேல்
நீள் நிலா வெண் குடை வாணனார் வேள்வியில் மண் இரந்த
மாணியார் வல்லவாழ் சொல்லுமா வல்லை ஆய் மருவு நெஞ்சே 3

1811 பண் உலாம் மென் மொழிப் பாவைமார் பணை முலை அணைதும் நாம் என்று
எண்ணுவார் எண்ணம்–அது ஒழித்து நீ பிழைத்து உயக் கருதினாயேல்

# 80. THIRUVALLAVAZH

விண் உளார் விண்ணின் மீது இயன்ற வேங்கடத்து உளார் வளங்கொள் முந்நீர்
வண்ணனார் வல்லவாழ் சொல்லுமா வல்லை ஆய் மருவு நெஞ்சே 4

1812 மஞ்சு தோய் வெண் குடை மன்னர் ஆய் வாரணம் சூழ வாழ்ந்தார்
துஞ்சினார் என்பது ஓர் சொல்லை நீ துயர் எனக் கருதினாயேல்
நஞ்சு தோய் கொங்கைமேல் அம் கை வாய் வைத்து அவள் நாளை உண்ட
மஞ்சனார் வல்லவாழ் சொல்லுமா வல்லை ஆய் மருவு நெஞ்சே 5

1813 உருவின் ஆர் பிறவி சேர் ஊன் பொதி நரம்பு தோல் குரம்பையுள் புக்கு
அருவி நோய் செய்து நின்று ஐவர்_தாம் வாழ்வதற்கு அஞ்சினாயேல்
திருவின் ஆர் வேதம் நான்கு ஐந்து தீ வேள்வியோடு அங்கம் ஆறும்
மருவினார் வல்லவாழ் சொல்லுமா வல்லை ஆய் மருவு நெஞ்சே 6

1814 நோய் எலாம் பெய்தது ஓர் ஆக்கையை மெய் எனக் கொண்டு வாளா
பேயர்_தாம் பேசும் அப் பேச்சை நீ பிழை எனக் கருதினாயேல்
தீ உலாம் வெம் கதிர் திங்கள் ஆய் மங்குல் வான் ஆகி நின்ற
மாயனார் வல்லவாழ் சொல்லுமா வல்லை ஆய் மருவு நெஞ்சே 7

1815 மஞ்சு சேர் வான் எரி நீர் நிலம் கால் இவை மயங்கி நின்ற
அஞ்சு சேர் ஆக்கையை அரணம் அன்று என்று உயக் கருதினாயேல்
சந்து சேர் மென் முலைப் பொன் மலர்ப் பாவையும் தாமும் நாளும்
வந்து சேர் வல்லவாழ் சொல்லுமா வல்லை ஆய் மருவு நெஞ்சே 8

1816 வெள்ளியார் பிண்டியார் போதியார் என்று இவர் ஓதுகின்ற
கள்ளநூல்_தன்னையும் கருமம் அன்று என்று உயக் கருதினாயேல்
தெள்ளியார் கைதொழும் தேவனார் மா முநீர் அமுது தந்த
வள்ளலார் வல்லவாழ் சொல்லுமா வல்லை ஆய் மருவு நெஞ்சே 9

1817 மறைவலார் குறைவு இலார் உறையும் ஊர் வல்லவாழ் அடிகள்_தம்மைச்
சிறை குலாம் வண்டு அறை சோலை சூழ் கோல நீள் ஆலி நாடன்
கறை உலாம் வேல்வல கலியன் வாய் ஒலி இவை கற்று வல்லார்
இறைவர் ஆய் இரு நிலம் காவல் பூண்டு இன்பம் நன்கு எய்துவாரே 10

### பெரிய மடல்

2674 மன்னும் அரங்கத்து எம் மா மணியை வல்லவாழ்ப்
பின்னை மணாளனை பேரில் பிறப்பிலியை (118)

### நம்மாழ்வார்

### திருவல்லவாழ் செல்லுதலைத் தடுக்கும் தோழியர்க்குத் தலைவி கூறுதல் (திருவல்லவாழ்)

3205 மான் ஏய் நோக்கு நல்லீர் வைகலும் வினையேன் மெலிய
வான் ஆர் வண் கமுகும் மது மல்லிகை கமழும்
தேன் ஆர் சோலைகள் சூழ் திருவல்லவாழ் உறையும்
கோனாரை அடியேன் அடிகூடுவது என்றுகொலோ? (1)

# 80. THIRUVALLAVAZH

3206 என்று கொல் தோழிமீர்காள் எம்மை நீர் நலிந்து என் செய்தீரோ?
பொன்திகழ் புன்னை மகிழ் புது மாதவி மீது அணவி
தென்றல் மணம் கமழும் திருவல்லவாழ் நகருள்
நின்ற பிரான் அடிநீறு அடியோம் கொண்டு சூடுவதே? (2)

3207 சூடு மலர்க்குழலீர் துயராட்டியேன் மெலிய
பாடும் நல் வேத ஒலி பரவைத் திரை போல் முழங்க
மாடு உயர்ந்து ஓமப் புகை கமழும் தண் திருவல்லவாழ்
நீடு உறைகின்ற பிரான் கழல் காண்டும்கொல் நிச்சலுமே? (3)

3208 நிச்சலும் தோழிமீர்காள் எம்மை நீர் நலிந்து என் செய்தீரோ?
பச்சிலை நீள் கமுகும் பலவும் தெங்கும் வாழைகளும்
மச்சு அணி மாடங்கள் மீது அணவும் தண் திருவல்லவாழ்
நச்சு அரவின் அணைமேல் நம்பிரானது நல் நலமே (4)

3209 நல் நலத் தோழிமீர்காள் நல்ல அந்தணர் வேள்விப் புகை
மைந் நலம் கொண்டு உயர் விண் மறைக்கும் தண் திருவல்லவாழ்
கன்னல் அம் கட்டி தன்னை கனியை இன் அமுதம் தன்னை
என் நலம் கொள் சுடரை என்றுகொல் கண்கள் காண்பதுவே? (5)

3210 காண்பது எஞ்ஞான்றுகொலோ வினையேன் கனிவாய் மடவீர்
பாண் குரல் வண்டினொடு பசுந் தென்றலும் ஆகி எங்கும்
சேண் சினை ஓங்கு மரச் செழுங் கானல் திருவல்லவாழ்
மாண் குறள் கோலப் பிரான் மலர்த் தாமரைப் பாதங்களே? (6)

3211 பாதங்கள்மேல் அணி பூந் தொழக் கூடுங்கொல் பாவை நல்லீர்
ஓத நெடுந் தடத்துள் உயர் தாமரை செங்கழுநீர்
மாதர்கள் வாள் முகமும் கண்ணும் ஏந்தும் திருவல்லவாழ்
நாதன் இஞ் ஞாலம் உண்ட நம் பிரான் தன்னை நாள்தொறுமே? (7)

3212 நாள்தொறும் வீடு இன்றியே தொழக் கூடுங்கொல் நல் நுதலீர்
ஆடு உறு தீங் கரும்பும் விளை செந்நெலும் ஆகி எங்கும்
மாடு உறு பூந் தடம் சேர் வயல் சூழ் தண் திருவல்லவாழ்
நீடு உறைகின்ற பிரான் நிலம் தாவிய நீள் கழலே? (8)

3213 கழல் வளை பூரிப்ப யாம் கண்டு கைதொழக் கூடுங்கொலோ
குழல் என்ன யாழும் என்ன குளிர் சோலையுள் தேன் அருந்தி
மழலை வரி வண்டுகள் இசை பாடும் திருவல்லவாழ்
சுழலின் மலி சக்கரப் பெருமானது தொல் அருளே? (9)

3214 தொல் அருள் நல் வினையால் சொலக் கூடுங்கொல் தோழிமீர்காள்
தொல் அருள் மண்ணும் விண்ணும் தொழ நின்ற திருநகரம்
நல் அருள் ஆயிரவர் நலன் ஏந்தும் திருவல்லவாழ்
நல் அருள் நம் பெருமான் நாராயணன் நாமங்களே? (10)

# 80. THIRUVALLAVAZH

3215 நாமங்கள் ஆயிரம் உடைய நம் பெருமான் அடிமேல்
சேமம் கொள் தென் குருகூர்ச் சடகோபன் தெரிந்து உரைத்த
நாமங்கள் ஆயிரத்துள் இவை பத்தும் திருவல்லவாழ்
சேமம் கொள் தென் நகர்மேல் செப்புவார் சிறந்தார் பிறந்தே (11)

**Festivals :** Masi Month – Kodiyetram and Aarattu

**Temple Timings:** 4.00 am to 11.00 am
5.00 pm to 7.30 pm

**Address :** Arulmigu Thiruvazhmarban Thirukkoil ( Sri Vallaba Shetram ),
Thiruvallavazh - 689101,
Pathanam Thitta District.
Kerala State

**Phone :** 0469 – 2700191

**Location :** 3 kms from Thiruvalla Rly Stn which is in between Kollam - Ernakulam railway lane. We can reach this sthalam also by bus that goes towards kottayam. For staying, Chattirams are available

**Nearest Railway Station:** Thiruvalla

**Nearest Airport:** Nedumbacheri

**Hotels :** Plenty of good hotels in Pathanam Thitta

Courtesy : Sri Seshadri Swamy
Dr.V.Satagopan Swamy
www.pbase/svami
Dinamalar